# சுற்றறிக்கை

## அனைத்து உயர்/ மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களின் கவனத்திற்கு

அனைத்து உயர்/ மேல்நிலைப் பள்ளிக்கு வருகின்ற திங்கட்கிழமை முதல் பள்ளி குழந்தைகளுக்கான இலவச சீருடை வழங்கப்பட உரிய ஏற்பாடுகளை சமூக நலத்துறை மூலம் செய்யப்பட்டுள்ளது.

இலவச சீருடைகள் சமூக நலத்துறையின் பணியாளர்கள் பள்ளிகளுக்கு நேரடியாக வந்து மாணவர்களின் சீருடைகள் அளவு எடுப்பதற்கு ஏற்ப தங்கள் பள்ளிக்கு வருகை புரிய உள்ளதால் ஒவ்வொரு பள்ளி தலைமை ஆசிரியர், வகுப்பு ஆசிரியர் மற்றும் சமூக நலத்துறையின் பணியாளர்களுடன் இணைந்து மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2024 –2025 கல்வி ஆண்டில் முதல் சீருடை வழங்குகின்ற போது மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகள் பெற்றோர் ஆசிரியர் கழகம் எஸ்.எம்.சி. உறுப்பினர்கள் முன்னிலையில் வழங்கப்பட உள்ளதாலும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் சமூக நலத்துறை மூலம் பெறப்படுகின்ற சீருடைகளுக்கு உரிய ஒப்புகை சீட்டு வழங்கப்பட வேண்டும் என்றும், இந்த சீருடை வழங்கும்போது அப்பணியாளர்கள் முதல் வகுப்பு மாணவர்களுக்கும் புதிதாக சேர்ந்துள்ள மாணவர்களுக்கும் அளவு எடுக்கும் பணியும் நடைபெற உள்ளது என்பதை தெரிவித்துள்ளார்கள்.

எனவே அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள் வகுப்பு ஆசிரியர்களுடன் ஒருங்கிணைந்து எந்த ஒரு குழந்தையும் விடுபடாமல் அளவெடுத்து சீருடையை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஒப்பம் //
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.